# "கல்முனைப்பிரதேச ஒப்பாரிப்பாடல்கள்"

16 AUG 2012
Eastern University, Sri Lanka.

திருமதி. ஜு.ஞா.சிறிதரன்

பதிவிலக்கம் : EU/PGS/2008/MA(TL)/26

சுட்டிலக்கம் : PGS/ 2008/MA(TL)/ 60

MA10
Thesis
Library - EUSL

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் மொழித்துறையில் தமிழ் முதுகலைமாணி கற்கை நெறியின் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இவ் ஆய்வுக் கட்டுரையானது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

10

முதுகலைமாணி,

மொழித் துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை,

**2009.**

PROCESSED
Main Library, EUSL

பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. இயல் ஒன்று | 01--03 |
| 1.0 முன்னுரை | 01 |
| 1.1 அறிமுகம் | 01 |
| 1.2 ஆய்வுச் சுருக்கம் | 02 |
| 1.3 ஆய்வு நோக்கம் | 03 |
| 1.4 ஆய்வுப்பிரச்சினைகள் | 03 |
| 1.5 ஆய்வு மூலங்கள் | 03 |
| 2. இயல் இரண்டு | 04--06 |
| 2.0 ஒப்பாரிப் பாடல்கள் ஓர் அறிமுகம் | 04 |
| 3. இயல் மூன்று | 07--35 |
| 3.0 கல்முனைப் பிரதேச ஒப்பாரிப் பாடல்கள் | 07 |
| 3.1 உறவுகள் மத்தியில் ஒப்பாரிப் பாடல்கள் | 07 |
| 3.1.1 மனைவியின் ஒப்பாரி | 07 |
| 3.1.2 தாயின் ஒப்பாரி | 17 |
| 3.1.3 மகளின் ஒப்பாரி | 29 |
| 3.1.4 சகோதரியின் ஒப்பாரி | 33 |
| 4. இயல் நான்கு | 36--53 |
| 4.1 நவீன வாய் மொழி இலக்கிய மரபில் ஒப்பாரிப் பாடல்கள் | 36 |
| 4.1.1. குறிப்பிட்ட பாடலாசிரியர் | 38 |
| 4.1.2 பாடுமாந்தர் | 39 |
| 4.1.3 உள்ளடக்கம் | 40 |
| 4.1.4 மொழி | 41 |
| 4.1.5 சமூகம் | 45 |
| 4.1.6 அரசியல் | 46 |
| 5. இயல் ஐந்து | 54—60 |
| 5.0 இயற்கை அனர்த்தங்களில் ஒப்பாரிப் பாடல்கள் | 54 |
| 5.1 சுனாமி அனர்த்தத்தின் பின் பாடப்பட்ட ஒப்பாரி | 54 |

## 1.2 ஆய்வுச் சுருக்கம்

இந்நூலின் ஆய்வுக்குட்பட்ட கல்முனைப் பிரதேசமானது வடக்கே பெரிய கல்லாறு கிராமம் தொடக்கம் தெற்கே அக்கரைப்பற்று கிராமம் வரையுள்ள கிராமப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

"தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்கு தாலாட்டும், புருசனை இழந்தவளுக்கு ஒப்பாரியும் தானகவே வரும்" என்பது பழமொழி. கணவன் மட்டுமல்ல எந்த உறவை இழக்க நேர்தாலும் விளைவது ஒப்பாரி எனலாம். ஒப்பாரிப் பாடல்கள் இறந்தவரின் பெயரைக் குறிப்பிடுவதில்லை. இவரின் பண்புகளைக் கூறும் தன்மை யுடையன.

இந்த ஒப்பாரிப் பாடல்களைப் பாடுவோர் பெரும்பாலும் வயதான பெண்களே. சில இடங்களில் கூலிக்கும் ஒப்பாரி பாடுபவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் தற்போது அது மறைந்துவிட்டது. பொதுவாக ஒப்பாரி பாடும் மரபே மாறிவிட்ட தெனலாம்.

ஒப்பாரியின் அமைப்பு பற்றி எனது ஆய்வுக்குரிய பிரதேசத்தில் எழுத்து மூலமான ஆவணம் எதனையும் பெறமுடியவில்லை. சுமார் முப்பது அல்லது முப்பத்தைந்து வருடத்திற்கு முன் இந்த நடைமுறை வழக்கிலிருந்திருக்கலாம் ஆனால் பழைய தலைமுறையினர் இந்த வழக்கத்தை கண்டும் கேட்டும் இருப்பர். இன்றோ வாய்வழிச் செய்தியாக மட்டுமே இந்த வழக்கம் பேசப்படுகிறது. நான் ஒப்பாரிப் பாடல்களை ஆராயும் நோக்குடன் பாமர மக்களிடம் நேரடியாகச் சென்று கள ஆய்வினைச் செய்வதன் மூலம் தகவல்களைத் திரட்ட முடிந்தது. இந்த ஒப்பாரிப் பாடல்கள்

1. இழவு வீட்டில் பாடும் ஒப்பாரிப் பாடல்கள்
2. நவீன வாய்மொழி இலக்கிய மரபில் ஒப்பாரிப் பாடல்கள் என்றும்
3. இயர்க்கை அனர்த்தங்களின் போது இறைவனை இறைஞ்சிப்பாடிய ஒப்பாரிப் பாடல்கள்

என்றும் வகுத்து ஆராயப்படுகின்றன.

இப்பிரதேசத்து ஒப்பாரிப் பாடல்கள் மற்றைய பிரதேச ஒப்பாரிப் பாடல்களுடன் நோக்கும் போது சில இடங்களில் ஒப்புவமை காணப்படினும் மக்களோடிணைந்த பழக்கவழக்கம், பண்பாடு, மொழி, நாகரிகம் என்பவற்றை தன்னகத்தே கொண்டு விளங்குவதால் நாட்டின் பண்பாட்டியல் ஆய்வுக்கு இது ஓர் ஆதாரமாக அமையும் என்பது திண்ணம்.